# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 61/2014 நாள்.08.07.2026

PW1- திரு. விஜயக்குமார், த/பெ. திரு.கிருஷ்ணசாமி

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் வழக்கு சொத்தில் பங்கு கேட்டு போட்டுள்ளேன். வழக்கு சொத்து என்ன என்றால் இரண்டு வீடு. கருந்தட்டான்குடி வீடு பூர்விகமா என்றால் தாத்தா பாட்டி வாங்கிய வீடு. அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 2வது இனசொத்து செல்வம் நகர் வீடு பூர்விக சொத்தா என்றால் கூட்டுகுடும்பத்தால் வாங்கபட்ட சொத்து. யார் பெயரில் பத்திரம் உள்ளது என்றால் மாரியப்ப மணியகாரர், அவர் என்னுடைய பெரியப்பா. அவருடைய வாரிசுகள்தான் பிரதிவாதிகளா என்றால் ஆமாம். என் அப்பாவும் மாரியப்பரும் அண்ணன் தம்பி என்றால் ஆமாம். பொதுகுடும்பம் யார் யார் அடங்கியது என்றால் பெரியப்பா, அப்பா, அத்தை. மேற்படி மூன்று பேர் அடங்கிய குடும்பத்தால் வாங்கபட்ட சொத்தா என்றால் ஆமாம். பி அட்டவணை சொத்து எந்த வருடம் யாரிடமிருந்து எவ்வளவுக்கு கிரையம் வாங்கபட்டது என்றால் தெரியவில்லை. அதில் மூவரின் பண பங்களிப்பு எவ்வளவு என்றால் தெரியாது. மாரியப்பமணியகாரர் குடும்பத்துடன் அந்த வீட்டில் வசித்தார் என்றால் ஆமாம் நாங்களும் அந்த வீட்டில்தான் வசித்தோம். ஆரம்பம் முதல் பிரதிவாதிகள் அந்த வீட்டில் இருந்துவருகிறார்கள் என்றால் ஆமாம். என் குடும்பம் வெளியில் உள்ளோம் என்றால் சரியல்ல அதே வீட்டில்தான் உள்ளோம். என் அத்தையின் வாரிசுகள் எங்கு இருந்தார்கள் என்றால் பி அட்டவணைவீட்டில்தான் இருந்தார்கள் பின்பு அத்தை மகள் மட்டும் அங்கிருந்தார் மற்றவர்கள் கரந்தைக்கு போய்விட்டார். அத்தை மகள் மட்டும் ஏன் அங்கிருந்தார் என்றால் அண்ணன் திருமணம் செய்துகொண்டார். என் அப்பாவுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் முதல்தாரத்திற்கு ஒரு பையன், 2வதுதாரத்திற்கு 9பையன் மற்றும் 3பெண்கள். 13 பிள்ளைகளும் திருமணமாகி பி அட்டவணை சொத்தில்தான் குடியிருக்கிறோமா என்றால் பெண் பிள்ளைகள் திருமணமாகி மாப்பிள்ளை வீட்டிற்கு சென்றுவிட்டார்கள் ஆண்பிள்ளைகள் அங்குதான் இருக்கிறோம்.

மாரியப்பமணியாரருக்கு முதல் தாரத்தில் ஒரு பெண், 2 பையன், 2வது தாரத்திற்கு 7பெண்கள், 4 பையன்கள். ரேஷன்கார்டு, ஆதார்கார்டு ஆகியவை அந்த விலாசத்தில் உள்ளதா என்றால் தற்போது இல்லை முன்பு அங்குதான் இருந்தது. முன்பு என்பது எந்த ஆண்டு வரை என்றால் 1992. கிருஷ்ணசாமி மணியகாரராகிய மகன்கள் எங்களுக்கு தனிபட்ட சொத்து உள்ளதா என்றால் உள்ளது. அந்த சொத்துகள் எல்லாம் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவில்லை. பூர்விகம் என்பது வீடு மட்டுமா என்றால் நிலமும் உண்டு. நிலம் எவ்வளவு என்றால் மொத்தமாக 100 ஏக்கர் இருக்கும். அதை பாக வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அதை விற்றுவிட்டோம். நாங்கள் விற்றோமா என்றால் இரண்டு குடும்பமும் சேர்த்து மொத்தமாக விற்றோம். இரண்டு குடும்பமும் சேர்ந்துதான் விற்றோம் என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. அவைஎல்லாம் பாகம் பிரித்து விற்றதா என்றால் இல்லை. எப்படி விற்றோம் யாருக்கு விற்றோம் என்ற விபரம் சொல்லமுடியுமா என்றால் முடியாது. பி அட்டவணை சொத்து வீடு ராஜராஜன் வீடு கட்டும் சங்கத்தால் விற்கபட்டது என்றால் ஆமாம். Allotment யார் பெயருக்கு விற்றது யார் பெயருக்கு என்றால் Allotment மாரியப்பமணியகாரர், பத்திரம் அவருடைய வாரிசுகள் பெயரில். வீட்டுவரி, மின்கட்டணவரி, தண்ணீர் வரி எல்லாம் மணியகாரர் பெயரிலும், அவருடைய வாரிசுகள் பெயரிலும் உள்ளது என்றால் ஆமாம் நாங்களும் பணம் சேர்ந்து கட்டினோம். என் அப்பா உயிருடன் இருக்கும் வரை மாரியப்ப மணியகாரரிடம் பங்கு கேட்டாரா என்றால் இல்லை, நாங்கள்தான் கேட்டோம். சொசைட்டிக்கு பணம் என் அப்பா கட்டினாரா என்றால் அப்பா கட்டியது தெரியாது என் சகோதரர்கள் கட்டியுள்ளார்கள். அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் தெரியவில்லை. கிரைய பத்திரம் எந்த வருடம் வாரிசுகளுக்கு எழுதி கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் பெயரில் பத்திரம் ஏற்பட்டது அந்த காலத்திலேயே எங்களுக்கு தெரியும் என்றால் ஆமாம். சொசைட்டிக்கு போய் எங்களுக்கும் பங்குள்ள பொதுகுடும்ப சொத்து என்று சங்கத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தோமா என்றால் நான் எடுக்கவில்லை. பங்கஜத்தின் வாரிசுகள் வழக்கில் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 5இல் பதிவு பெற்ற பாகம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் தெரியாது. அந்த பத்திரத்தில் உள்ள சொத்துக்கள் இந்த வழக்கில் சேர்க்கபட்டுள்ளதா என்றால் இல்லை. மாரியப்பமணியகாரர் என்பவர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் அனைத்து ஆறுகளிலும் மீன்பிடிக்கும் குத்தகை உரிமையை பெற்றிருந்தார் என்றால் ஆமாம். மீன்பிடிக்கும் சங்கத்திற்கு மாரியப்பமணியகாரர் தலைவராக இருந்தார் என்றால் ஆமாம். என் அப்பா அவ்வாறு ஒரு பொறுப்பிலும் வேலையிலும் இல்லை என்றால் ஆமாம் என் அண்ணன் ஏகாம்பரம் 1976க்கு பிறகு இருந்தார். அதற்கு முன்பே பி அட்டவணை சொத்து வீடு வாங்கபட்டுவிட்டது என்றால் ஆமாம். என்ன பொது வருமானம் என்ன தொழில் என்றால் என் அப்பா மீன் வியாபாரம் ஏஜென்டாக இருந்து செய்தார், குடும்பம் பிரிவில்லாமல் ஒன்றாகதான் இருந்தோம். என் அப்பா மீன் வியாபாரம் செய்து வருமானம் ஈட்டினார் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் தற்போது இல்லை. என் அப்பா சொசைட்டியில் உறுப்பினர் இல்லை என்றும், நான் சொல்வது உண்மையல்ல என்றும் சொன்னால் என் அப்பாவுக்கு உறுப்பனிர் அட்டை இல்லை எங்களுக்கு இருக்கிறது. மாரியப்பமணியகாரர் எப்போது இறந்தார் என்றால் 1976. என் அப்பா எப்போது இறந்தார் என்றால் 1980. பங்கஜத்திற்கு எப்படி உரிமை என்றால் பூர்விக சொத்தில் அவர்களுக்கு பங்கு உண்டு. வழக்கில் இல்லாத இதர பூர்விகசொத்தில் பங்கஜத்திற்கு பங்கு கொடுத்தோமா என்றால் இல்லை. மாரியப்பமணியகாரர்தான் மீனவர்களுக்கு ஒரு சங்கத்தை உருவாக்கினார் என்றால் ஆமாம். தாவா சொத்தை உள்ளடக்கிய என் அப்பா பெயரிலுள்ள குடும்பஅட்டை, ஓட்டு அட்டை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். மாரியப்பமணியகாரர் நிறை சாம்பாதித்தார் என்றும், அதை என் அப்பாவுக்கும், அத்தை பங்கஜத்திற்கும் அவர் கொடுத்துள்ளார் என்றால் தெரியவில்லை. என்அப்பா பெயரில் 3ஏக்கர் 60 சென்ட் நீடாமங்கலத்தில் மாந்தோப்பு உள்ளது என்றால் அது தெரியாது, படுகை சொத்துதான் தெரியும். மாரியம்மன்கோவிலில் ஒரு 20 ஏக்கர் நிலம் என் அப்பாவுக்கு இருந்தது என்றால் பெரியப்பாவும் அப்பாவும் இருக்கும்போதே அதை விற்றுவிட்டார்கள் அதில் 3ஏக்கர் 87 சென்ம் இருந்தது அதை அண்ணன் குடும்பத்திற்காக விற்று சொசைட்டி கட்டினார். மேற்படி 20ஏக்கரை என் அப்பாவும் பெரியப்பாவும் சேர்ந்துவிற்றதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.மாரியம்மன்கோவில் இடம் மனைபிரிவாக மாறியுள்ளது என்றால் தெரியாது. என் அண்ணன் 3ஏக்கர் 87 சென்ட்டை யாரிடம் எப்போது விற்றார் என்றால் தெரியாது. சீனிவாசபுரத்து இடம் எங்களிடம் உள்ளது என்றால் இல்லை. மாரியப்பமணியகாரர் நிறைய பணம் சாம்பாதித்து அவருடைய

பிள்ளைகளுக்கும், எங்களுக்கும் செட்டில்மெண்ட் கொடுத்துள்ளார் என்றால் கொடுத்துள்ளார். 12.12.1954இல் அப்படி ஒரு செட்டில்மெண்ட் உள்ளது என்றால் தெரியாது. மாரியப்ப மணியகாரர் அவ்வாறு என் உடன் பிறந்த ஏகாம்பரத்திற்கு 21 ஏக்கர் 12 சென்ட்ம், பஞ்சாபிகேசன் என்ற சகோதரருக்கு 21 ஏக்கர் 11 சென்ட்ம், ஜெகன்நாதனுக்கு 21 ஏ 55 சென்ட், ராஜேந்திரனுக்கு 21 ஏ 58 சென்ட், பிரகதீஸ்வரன் 11 ஏக்கர் 17 சென்ட் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். தம்பி குடும்பம் எங்களுக்கு மட்டும் 100 ஏக்கர் எழுதி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். இவற்றை எத்தனை கோடிக்கு விற்றோம் என்றால் தெரியாது. இந்த விஷயம் எல்லாம் ராஜேந்திரனுக்கு தெரியும் என்றால் ஆமாம். அவருடைய சாட்சியத்தை நீக்கினோம் என்றால் ஆமாம் அவர் வெளிநாடு போய்விட்டார். 100ஏக்கரை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் ஆமாம். ராஜேந்திரன் தஞ்சாவூர் நடராஜபுரம் காலனி, 8வது தெருவில் ஒரு வீடு வைத்துள்ளார் என்றால வைத்திருந்தார் தற்போது விற்றுவிட்டார். அதன்பிறகு பாண்டிச்சேரியில் வீடு வாங்கினார் என்றால் சொந்த உழைப்பில் வாங்கினார். 6ஆம் வாதி ரேணுகாதேவி சுந்தரம் நகரில் 1கோடி மதிப்பில் வீடு வைத்துள்ளார் என்றால் ஆமாம் அவருடைய கணவர் மிலிட்டரியிலிருந்து சாம்பாதித்து வாங்கினார். சுமித்ரா 9ஆம் வாதி மெடிக்கல்காலேஜ் ரோட்டில் அப்பார்ட்மெண்ட் வைத்துள்ளார் என்றால் வீடு வைத்திருந்து விற்றுவிட்டார் அதை வாங்கியவர் அப்பார்ட்மெண்ட் கட்டியுள்ளார். 2ஆம் வாதி பத்மசீலன் டேனியல் தாமஸ் நகரில் 70லட்சம் மதிப்புள்ள வீடு வைத்திருந்தார் என்றால் அவருடைய சொந்த உழைப்பில் வாங்கியுள்ளார். மருத்துவகல்லுரி சாலை கேதார்புரத்தில் 8வீடு உள்ளது என்றால் வாங்கி கட்டி பாதியிலேயே விற்றுவிட்டோம். மேற்படி சொத்துக்கள் வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் அது அவருடைய உழைப்பால் வாங்கியது. என் தாத்தா இந்த அளவு தொழிலோ வருமானமோ ஈட்டவில்லை என்றால் தெரியாது. மாரியப்பமணியகாரர்தான் அரசாங்கத்திலிருந்து மீன் குத்தகை பெற்று சாம்பாதித்தார் என்றும் அது அவருடைய தனிபட்ட வருமானம் என்று சொன்னால் ஆமாம், என் அப்பாவும் அவருடன் சேர்ந்துதான் வருமானம் ஈட்டினார். நாங்கள் இருந்தது ஏ அட்டவணை சொத்து கருந்தட்டான்குடி வீடு என்றால் இல்லை. அது எங்கள் நிரந்தர விலாசம் என்றால் சரியல்ல. மாரியப்பமணியகாரர் தம்பி மகன்களான நாங்கள் படிப்பதற்காக பி அட்டவணை

சொத்தில் ஒரு அறையை மட்டும் தற்காலிகமாக கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. அதைதான் நான் அங்கு வசித்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல ஒன்றாகதான் வசித்தோம். என் அப்பா தனியாக சொத்து வாங்கியுள்ளாரா என்றால் இல்லை. பி அட்டவணை சொத்து வாங்க என் அப்பாவின் உழைப்போ, பணபங்களிப்போ எதுவும் கிடையாது என்றும் மாரியப்பமணியகாரரால் கொடுக்கபட்டது என்றால் சரியல்ல இரண்டுபேர் உழைப்பு. கள்ளுகடை யார் நடத்தியது என்றால் பெரியப்பா எடுத்தார் நாங்கள் எல்லோரும் வேலை செய்தோம். அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. 5.4.1989ல் 5ஆம் வாதி ராஜேந்திரனும், ஏகாம்பரமும் மாரியப்பமணியகாரர் மனைவி மற்றும் சொசைட்டிக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் தெரியாது. அதற்கு மாரியப்பமணியகாரர் மனைவி காமாட்சியம்மாள் பதில் கொடுத்தார் என்றும் அப்போதே பி அட்டவணை சொத்தில் கூட்டு பங்கு கேட்கும் நின்றுபோய்விட்டது என்று சொன்னால் தெரியாது. சொசைட்டியில் 2009ல் கிரைய பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றும் அதை நாங்கள் ஆட்சேபித்து எங்கள் உரிமையை கோராமல் இருந்தோம் என்று சொன்னால் எனக்கு தெரியாது. அதன்பிறகு மாரியப்பமணியகாரர் வாரிசுகள் குடும்ப தேவைக்காக விற்கமுயற்சி செய்தார்கள் என்றும் அதனால் நாங்கள் இந்த வழக்கை போட்டோம் என்று சொன்னால் ஆமாம். மாரியப்பமணியகாரர் குடும்பத்திற்கு 1/3 எங்களுக்கு 1/3 பங்கஜம் வாரிசுகளுக்கு 1/3 என்று கேட்கிறேனே அது எப்படி வந்தது என்றால் கூட்டுகுடும்ப சொத்து என்பதால் கேட்கிறோம். எப்படி கூட்டுகுடும்ப சொத்து என்றால் ஒன்றாகயிருந்துதான் வாங்கினோம். ஏ அட்டவணை வீட்டில் யார் இருந்தார் என்றால் பெரியப்பா மகள் யசோதா இருந்தார் தற்போது அவருடைய பேத்தி இருக்கிறார். எங்களுடைய சொத்துக்களை சேர்த்து பாகம் பிரிக்க தயாராக இருக்கிறோமா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணம் கிருஷ்ணசாமி மணியகாரர் நகர் என்று என் அப்பா பெயரில் ஒரு மனைஎண் 32ஐ என்னுடைய அனைத்து சகோதர சகோதரிகளும் சேர்ந்து விற்தற்கான ஆவணம் என்றும் அதில் பாகவீதமாக கிடைத்த சொத்தை மனையிட்டு விற்பதாக சொல்லியுள்ளோம் என்று சொன்னால் சொல்லியுள்ளோம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய அண்ணன் ராஜேந்திரன் கையெழுத்து என்றும் அவருக்கு நாங்கள் பவர் கொடுத்துள்ளோம் என்றும்

சொன்னால் ஆமாம் அந்த ஆவணம் **பி.சா.ஆ.1** ஆகும். இதைபோன்றுதான் எங்களுக்கு கிடைத்த சொத்துக்களை விற்றுள்ளோம் என்றால் ஆமாம். நாங்கள் பலனடைந்த சொத்துக்களை பாகத்தில் கிடைத்தது என்று சொல்லி விற்றுவிட்டு தற்போது பாகமே ஆகவில்லை என்று சொல்லி பி அட்டவணையை அடைவதற்காக சொல்கிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் கோரும் பாகம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.07.08 18:14:59 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**